மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு

RASI

ராசி சில்க்ஸ்



பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00



★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பின் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்

ராசி சில்க்ஸ்

70, 71A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.



சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 30 வெள்ளிக்கிழமை (13 - 05 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 166


# ஈழ அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம்; மேற்கு நாடுகளிடம் ஐ. நா. வலியுறுத்து!

## முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

கொழும்பு, மே 13

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இன்னும் சுமுகநிலை திரும்பவில்லை, ஆகவே இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப எடுக்கும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மேற்கண்டவாறு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையகம் மேற்கு நாடுகளைக் கேட்டுள்ளது.

சுவிஸ், நெதர்லாந்து போன்ற நாடுகள் அங்கு தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதும் —

அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியை நாடியுள்ளதும் தெரிந்தவையே.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமைய அதிகாரிகளும், கொழும்பு அலுவலக அதிகாரிகளும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு கடந்த மாதங்களில் விஜயம் செய்து —

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



சொத்தி உபாலியின் கைதுடன் டி பியாருக்கு உஷார் பிறந்திருக்கும் பாருங்கோ...!

## பிரிட்டிஷ் எதிர்க்கட்சி தலைவர் மரணம்

லண்டன், மே 13

பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஜோன் ஸ்மித் நேற்று மாரடைப்பினால் காலமானார். அவருக்கு வயது 55.

அவர் வீட்டில் இருந்த

[6ஆம் பக்கம் பார்க்க]

## காமினியின் மைத்துனருக்கு முக்கிய பதவி

கொழும்பு, மே 13

கலாநிதி விக்கிரமவீரசூரியா கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சின் செயலாளராகவும் ஜனாதிபதியின் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த நியமனத்தை ஜனாதிபதி விஜேதுங்கா நேற்றுச் செய்தார்.

கலாநிதி விக்கிரமவீரசூரியா, காமினி திஸநாயக்காவின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-எ-6)

## பிளாம்பயான் நோயாளருடன் சென்றது

யாழ்ப்பாணம், மே 13

கொழும்பில் சிகிச்சை பெற்ற பதினொரு நோயாளிகளை ஏற்றிக் கொண்டு நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த பிளாம்பயான் கப்பல் கொழும்பில் சிகிச்சை பெற உள்ள 13 நோயாளரை ஏற்றிக்கொண்டு நேற்று மாலையே திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

(இ-17-15)

## விபத்தில் பெண் மரணம்

யாழ்ப்பாணம், மே 13

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவிழுந்த இருவரில் ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் காயமடைந்தார்.

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறை முனைப்பகுதி - மணல் ஒழுங்கையைச்சேர்ந்த இராசதுரை சரோஜாதேவி (வயது 52) என்ற பெண்ணே மரணமானார்.

மோட்டார் சைக்கிள் வீதியில் இருந்த குழியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நேற்று மோதல்

### சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 13

முல்லைத்தீவில் நேற்றுக் காலை படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு இராணுவ முகாமின் முன்னணிப் பாதுகாப்பு அரணில் இருந்து முன்னேற முயற்சித்தபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

[ஒ-எ-3]

## 78 - 84 க்கு இடையில் இளைப்பாறிய ஓய்வூதியர்களுக்கு விசேட கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 13

1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கும் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்கும் இடையில் ஓய்வுபெற்றவர்களுக்கு இரண்டு விசேட கொடுப்பனவுகள் கிடைக்கவிருக்கின்றன.

1987, 1988 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஓய்வூதிய மாற்ற அட்டவணைகளின் விளைவாக உண்டான ஓய்வூதியக் கொடுப்பனவு முரண்பாடுகளை நீக்கும் விதத்திலேயே இந்த விசேட கொடுப்பனவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஓய்வூதியத் திணைக்களத்தின் 3/94 சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சுற்றறிக்கை யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளது.

பிரஸ்தாப சுற்றறிக்கையின் பிரகாரம் விசேட கொடுப்பனவுகளை ஜூலை மாத ஓய்வூதியத்துடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக ஓய்வூதியக் கிளைக் கணக்காளர் திரு. கே. வீரசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 1-1-87 இல் இருந்து 31-12-87 வரையான காலப்பகுதிக்கு மாதாந்தம் 33 ரூபா 67 சதமும் 1-1-88 இல் இருந்து 30-6-92 வரையிலான காலப்பகுதிக்கு மாதாந்தம் 156 ரூபாவும் — விசேட கொடுப்பனவாக வழங்கப்படும்.

இவ்விசேட கொடுப்பனவு 30-6-92 வரை வழங்கப்படும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

# ஸ்ரீலங்கா அரசின் அடக்கு முறை சிலியில் நடந்ததுக்கு ஒப்பானது

## மனித உரிமை காப்புக்குழு கண்டனம்

லண்டன், மே 13

ஸ்ரீலங்காவில் நடந்து கொண்டிருக்கும் அடக்குமுறைகள் 1970 - 80 ஆம் ஆண்டுகளில் சிலி மற்றும் ஆர்ஜென்ரீனா நாடுகளில் இடம்பெற்ற அடக்கு முறைகளுக்கு ஒப்பானவை.

மனித உரிமைகள் விஷயத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருபவரும் முன்னாள் "நிழல்" வெளியுறவு அமைச்சரும் தொழிற் கட்சி எம்பியுமான ஜெரால்ட் றொஸ்மன் இலங்கையில் மனித உரிமைகள் நிலை குறித்த கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று முன் தினம் இரவு பிரிட்டனின் நாடாளுமன்றக் கட்டத்தில் கமிட்டி அறை ஒன்றில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

பிரிட்டிஷ் எம்பிக்கள், மனித உரிமைகள் காப்புக் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரிட்டனில் நாடு கடந்த நிலையில் வாழும் தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் மனித உரிமைகளுக்கான கூட்டமைப்பால் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையில் நிலைமை சீராகும் வரை இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதற்கு ஒப்புதல் தெரிவிப்பதை நிறுத்தும்படி ஐ. நா. அகதிகள் தூதரகத்துக்கு இக்கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஜெரால்ட் றொஸ்மன் மேலும் பேசுகையில், கைதிகள் மற்றும் ஆட்கள் காணாமற்போவது சாதாரணமாகி விட்ட நிலையில் இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது அவசியம் நிறுத்தப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதே கருத்தை பிரிட்டிஷ் அகதிகள் கவுன்சில் இயக்குநர் அலிப் டப்ஸ்ரும் எதிரொலித்தார்.

இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளில் சிலர் தமது விருப்பத்துக்கு மாறா-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம் நேற்று முன்தினம் முதல் மூடப்பட்டது.

வடமாகாணத்தில் உள்ள மக்கள் தமது பிறப்பு, இறப்பு, பிறப்பு பதிவுகளைப் பெறுவதற்காக இந்த அலுவலகம் இயங்கி வந்தது.

இந்த அலுவலகத்துக்கு பொறுப்பாக கடமையாற்றி வந்த அதிகாரி ஓய்வு பெற்றதையடுத்து புதிய அதிகாரி எவரும் கடமையாற்ற முன்வராத காரணத்தாலேயே இந்த அலுவலகம் மூடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு வருடகாலம் இந்த அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இயங்கியதால் மக்கள் தமது காலம்பிந்திய இறப்பு, பிறப்பு பதிவுகளை உடனுக்குடன் பெறக்கூடியதாக இருந்ததாகவும் —

இந்த அலுவலகம் மேற்கொண்ட வேலைகள் யாவும் இனி கொழும்பிலேயே மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் மக்கள் தமது பதிவுகளை பெற மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் — சுட்டிக்காட்டப்பட்டது. (இ-3)

## அமைச்சரவைக் கூட்டத்தில் டி. பி - கூரே வாக்குவாதம்

கொழும்பு, மே 13

நேற்றுக் காலை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் சிறிசேன கூரேக்கும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. ஏனைய அமைச்சர்களின் தலையீட்டினால் இந்த வாக்குவாதம் இடையில் நிறுத்தப்பட்டது என்றும் —

இதைத் தொடர்ந்து அமைச்சர் சிறிசேன கூரேக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட பாதுகாப்பு அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் — வெரித்தாஸ் சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் சிறிசேன கூரே ஐ. தே. க. செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்த பின்னர் நேற்றுத் தான் அமைச்சரவை கூடியது.

[இ-3-6]

## கோமாரி திரும்பியது

வடமராட்சி, மே 13

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிய 'கோமாரி' கப்பல் நேற்று கொழும்பு திரும்பியது. இதில் வெளியூர்களுக்கான தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

(ஒ-173)

## பிரேமா நினைவுதினத்தில் பாபுவுக்கும் அஞ்சலி!

கொழும்பு, மே 13

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அலங்கரிக்கப்பட்டிருந்த மணிக்கூண்டு கோபுரத்தில், பாபுவுக்கும் அஞ்சலி தெரிவித்து பதாகை ஒன்று கட்டப்பட்டிருந்தது.

தொடங்கொட என்ற இடத்தில் பிரேமாவின் நினைவு நாளான கடந்த மேதினமன்று இவ்வாறு பதாகை ஒன்று கட்டப்பட்டிருந்ததாக "லங்காதீப" பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரேமதாஸ ஆதரவாளர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மணிக்கூண்டு கோபுரத்தில் முதல் நாள் இரவு (30 ஆம் திகதி) சிலர் பாபுவின் புகழ்பாடும் பதாகையைக் கட்டி விட்டனராம்.

அந்த பதாகையில் "ஏகாதிபத்திய வாதியை இல்லாமல் செய்த பாபுவை நினைவு கூருவோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்று செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கொழும்பில் மேதினத்தன்று மனித குண்டாகச் சென்று பிரேமதாஸாவை கொன்றவர் பாபு என்று கருதப்பட்டு வருவது தெரிந்ததே. (ஒ-9)

# சொத்தி உபாலி நேற்று கைதானார்!

கொழும்பு, மே 13

கொழும்பில் இயங்கும் மரணப்படை ஒன்றின் தலைவரான 'சொத்தி' உபாலி என்று அழைக்கப்படும் உபாலி ரஞ்சித் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டார்.

கட்டுநாஸ்தோட்டையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சொத்தி உபாலியைப் பிடிக்க பொலிஸார் பாரிய தேடுதல் நடத்தி வந்தனர்.

கொலை முயற்சி, கொலை செய்ய சதி செய்தது சம்பந்தப்பட்ட வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள சொத்தி உபாலி உட்பட மூன்று பேரைக் கைதுசெய்து ஆஜர் செய்யும்படி கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த பெரேரா நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்திருந்தார்.

நான்குபேரைச் சுட்டுக் கொல்ல முயற்சித்தது, அவர்களைக் கொல்லச் சதி செய்தது ஆகிய குற்றச்சாட்டுகள் இம் மூவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன. (இ-எ-6)

(மன் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்)

## பம்பலப்பிட்டியில் தடுத்து வைப்பு

கொழும்பு, மே 13

நேற்று அதிகாலை 4 30 மணியளவில் கட்டுநாஸ்தோட்டையில் வைத்து கைது செய்யப்பட்ட சொத்தி உபாலி உடனடியாகக் கொழும்புக்குக் கூட்டிவரப்பட்டார்.

அவர் தற்போது பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸாருக்குக் கிடைத்த நம்பத்தகுந்த தகவலைத் தொடர்ந்து, பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சித்துக அமரே தலைமையிலான விசேட பொலீஸ் குழு ஒன்று கட்டுநாஸ்தோட்டையில் ...

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சப்ரகமுவ ஆளுநராக ஈ. எல். சேனநாயக்கா

### மோதல் நிலையை அடுத்து மாற்றம்

சப்ரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக திரு. ஈ. எல். சேனநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

வட மத்திய மாகாண ஆளுநராக முன்னாள் அமைச்சர் ஈ. எல். பி. ஹுருள்ள நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இருவரும் நேற்று முற்பகல் ஜனாதிபதி விஜேதுங்கா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

திரு. ஈ. எல். சேனநாயக்கா சப்ரகமுவா ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் வட மத்திய மாகாண ஆளுநராக பணியாற்றி வந்தார்.

இவருக்கும் வட மத்திய மாகாண முதலமைச்சர் ஜி. டி. மஹிந்த சோமாவுக்கும் இடையே மோதல் நிலை உருவாகியதும் —

திரு. ஈ. எல். சேனநாயக்காவை ஆளுநர் பதவியில் இருந்து அகற்றும்படி முதலமைச்சர் ஜனாதிபதியைக் கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (இ-எ-6)

## சீதன ஒழிப்புப் பிரசாரம் அடுத்தவாரம் ஆரம்பமாகிறது

### 2 மாதங்களுக்குத் தொடர்ந்து நடக்கும்

யாழ்ப்பாணம், மே 13

தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் இந்த வாரம் தொடக்கம் இரண்டு மாதங்களுக்குத் தொடர்ச்சியாக சீதன ஒழிப்புப் பிரசாரம் நடைபெறவுள்ளது.

கோட்ட ரீதியாக நடைபெறவுள்ள சீதன ஒழிப்புப் பிரசாரத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் ஈடுபடவுள்ளனர்.

சீதனம் பற்றிய பொது மக்களின் கருத்தைத் திரட்டுவதும், சீதன ஒழிப்புக்கு அவர்களின் ஒத்துழைப்பை வேண்டுவதும் இப் பிரசாரத்தின் முக்கிய அம்சங்களாக அமையும்.

இரண்டு மாதங்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் தீவிர பிரசாரத்தில் ஆண், பெண் போராளிகள் ஈடுபடுவர்.

கோட்ட ரீதியான பிரசாரத்தில் கருத்தரங்குகள், விவாத மேடைகள், கலைநிகழ்வுகள், சுவரொட்டிகள் ஆகியவற்றின் மூலம் சீதனக் கொடுமையை விளக்கும் கருத்துக்கள் பரப்பப்படும்.

சீதன ஒழிப்பு நடவடிக்கையின் சட்டச் சிக்கல்கள் சீதனத் தடையை நடைமுறைப் படுத்துவதில் எதிர்நோக்கப்படும் இடர்பாடுகள் என்பன பற்றியும் பொதுமக்களிடம் இருந்து கருத்துக்கள் திரட்டப்படும்.

இரண்டு மாதங்களுக்கு தொடர் பிரசாரம் நடத்து முடிந்ததும் இறுக்கமான முறையில் சீதனத் தடை அமுலுக்கு வரும். (அ)

## மட்டக்களப்பில் மோதல்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலச்சேனைச் சேனை என்ற இடத்தில் நேற்று முன்தினம் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேதங்கள் குறித்துத் தெரியவரவில்லை. [ஒ-3]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

96 கலை, வர்த்தகம் புதிய பிரிவு

ஆரம்பம்: 14-05-1994 8மணி

- ★ இன்றில்லை, நேற்றில்லை கடந்த 22 வருட கால மாக செய்ததை சொல்வோம்.
- ★ கலை-வர்த்தக மாணவர்களின் பரீட்சைப் பெறு பேறுகளே எமது உத்தரவாதம்.
- ★ கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடைய கல்விக் குறி.கோள்.
- ★ பட்டம் பெற்ற ஆசிரியர்களின் பண்பான சேவை

பல பிரிவுகளுண்டு
இதுவே இறுதிப் பிரிவாகும்

(சி/8138)



## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 96 கலை, வர்த்தகம்

புதிய பிரிவு

- ✻ பிரிவு 1? இல்லை
- ✻ பிரிவு 2? இல்லையில்லை
- ✻ பிரிவு 3? இல்லவேயில்லை
- ✻ பிரிவு 4? ஆம்

மாணவன்:- வேறு புதிய பிரிவு ஆரம்பிப்பீர்களா?


நிர்வாகி:- எனக்கு விருப்பம்தான். ஆனால் எமது ஆசிரியர்களுக்கு நேரம் இல்லையே எனவே இதுவே இறுதிப் பிரிவு.

ஆரம்பம்: 14 - 05 - 1994
சனிக்கிழமை 7 00 a m.

[சி-8086]



## 2ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 15 – 05 – 1922

மறைவு: 05 – 05 – 1992

திருமதி
சோதிப்பிள்ளை புண்ணியமூர்த்தி

திதி: 13 – 05 – 1994

பாசமுள்ள நெஞ்சங்களைப்
பாரினில் பரிதவிக்கவிட்டுப்
பரமனடியில் பதியுடன் இணைந்து
இன்புற்றீர்களோ அம்மா!

சாந்திபெறப் பிரார்த்திக்கும்:

மக்கள், பேரப்பிள்ளைகள்:

உரப்புலம்,
ஆனைக்கோட்டை.

[30859]


## இன்று

உதவி ஆசிரியர் பயிற்சிநெறியைத் தொடர வவுனியாவுக்கு செல்லத் தெரிவு செய்யப்பட்டவர்களை இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் சமுகமளிக்கும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைநிய கராஜா கேட்டுள்ளார். (ந)

## பாடசாலைகளில்

யாழ். கல்வித்திணைக்கள தெற்கு வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கணித விஞ்ஞான குறு வினா விடைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரையிலான வகுப்பு மாணவர்களிடையே இப்போட்டிகள் நடைபெறும். (ந-117)

★ ★ ★

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு அதிபர் திரு. சு. நடராசா தலைமையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ந-152)

★ ★ ★

யாழ்ப்பாணக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு அதிபர் திரு.ஜி. இராசநாயகம் தலைமையில் நடைபெறும். (க-161)

★ ★ ★

ஹாட்லிக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரியின் வசந்தன் மைதானத்தில் நடைபெறும். பட்டயக் கணக்காளர் திரு ஏ. சோமசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (வ)

## வீடமைப்பு கடன் திட்டம்

வலிகாமம் தெற்கு, மே 13

வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச ஆளுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு குடும்பமொன்றுக்கு பதினாறாயிரம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இக்குடும்பங்களுக்கு அண்மையில் நாலாயிரம் ரூபா வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதேவேளையில் மேற்படி பிரதேசசெயலர் பிரிவில் இருபது குடும்பங்களுக்கு தாய மானிய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் தலா ஏழாயிரம் ரூபா வழங்கவும் – கடன் மேவு மானிய வீடமைப்பு திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பதினைந்து குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வழங்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (ந-152)

## சத்திர சிகிச்சை பிரிவுக்கு குழாய்க்கிணறு

வடமராட்சி, மே 13

மந்திகை ஆஸ்பத்திரி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கென தனியான குழாய்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

சுபிவிருத்திச் சபையினால் அமைக்கப்பட்டுவரும் இக் குழாய்க் கிணற்றிலிருந்து மோட்டர் மூலம் சத்திரசிகிச்சைப்பிரிவு தண்ணீர்த் தாங்கிக்கு தண்ணீர்பெறுவதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் பிரெஞ்சு வைத்தியக்குழு பொறுப்பேற்றுள்ளது. (இ-173)

சாவகச்சேரி பகுதியில்

## மலேரியா நோயால் 1070 பேர் பாதிப்பு

தென்மராட்சி, மே 13

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்து 70 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர். 948 பேர் மலேரியாவினாலும் ஒருவர் கலப்பு மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டதாக வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பெரும்பாலானோர் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் நெருப்புக் காய்ச்சலால் 18 பேரும், வயிற்றுளைவினால் 15 பேரும் செங்கண்மாரியினால் 18 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ந-117)

## விசேட உணவு முத்திரை தாய்மாருக்கு வழங்கப்படும்

ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் தாய்மாருக்கு 100 ரூபா பெறுமதி வாய்ந்த விசேட முத்திரை வழங்கும் திட்டம் ஒன்று கடந்த ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு ஏதுவாக ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் தாய்மாருக்கு மட்டும் 9ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரை வழங்குவதை நிறுத்திவைக்குமாறு யாழ் அரச அதிபர் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார். (ந-17)

## உடுவில் ஆஸ்பத்திரியில் நிரந்தர வைத்தியர் இல்லை

### நோயாளர்கள் சிரமம்

கடந்த சில மாதங்களாக உடுவில் அரசாங்க மத்திய வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர்கள் எவரும் நியமிக்கப்படாமையால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் கடமையாற்றிய பெண் வைத்தியர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டதைத்தொடர்ந்து வைத்தியர்கள் எவரும் இங்கு நிரந்தரமாக கடமையாற்றவில்லை.

இணுவில் அரசினர் வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் கடந்த இரண்டு மாதங்களுக்கு பேலாக மாலை வேளையில் உடுவில் வைத்தியசாலைக்கு வருகை தந்து நோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சையளித்து வருகின்றார்.

மீண்டும் ஒரு நிரந்தர வைத்தியரை இங்கு அனுப்பி தமது குறைபாட்டைப் போக்குமாறு பாதிப்படைந்த மக்கள் சுகாதாரப் பிரிவினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-152)

## சுகாதார ஊழியருக்கு சீருடைத் துணிகள் வந்தன

தென்மராட்சி, மே 13

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்கள நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இவ்வாண்டுக்குரிய சீருடைத்துணிகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் சகல நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு சகல ஊழியர்களுக்கும் வெள்ளைத் துணியே வழங்கப்படவுள்ளன. முன்னர் ஒருசிலஊழியர்களுக்கு காக்கி துணி வழங்கப்பட்டு வந்தது இதேவேளை –

கடந்த வருடத்திற்குரிய சீருடைகள் சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லையென ஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.

## மே மாத ஓய்வூதிய வவுச்சர்

யாழ்ப்பாணம், மே 13

இன்று அல்லது நாளை காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் 'றுகுணு' கப்பலில் இம் மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் எடுத்து வரப்படுவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

2 ஆயிரத்து 145 தேசிய அடையாள அட்டைகளும் அந்தக் கப்பலில் வரவுள்ளன. (ந-5)

## பழுதடைந்த மீன் விற்பனை

சாவகச்சேரி பொதுச் சந்தையில் விற்பனை செய்யப்படும் பழுதடைந்த மீன்கள் சுகாதாரப் பகுதியினரால் தினமும் கைப்பற்றப்பட்டு உடனுக்குடன் அழிக்கப்பட்டு வருகின்றன. (ந-117)


## பயிலுநர் லிகிதர் தேவை

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண தரம் அல்லது உயர்தரம்பயிற்சி பெற்று சித்தியடைந்தவர்களிடம் மேற்படி தவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சிக்காலத்தில் பயிலுநருக்கு பொருத்தமான படி வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 20 05 -1994

அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர்,
யாழ்ப்பாண ம வட்ட கூட்டுறவுச்சபை,
இல 14, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்:

செயலாளர்

13-5-94 [சி/8145]



## பரீட்சையில் சித்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையினால் நடத்தப்பட்ட 1993 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் கற்கை நெறியின் இறுதிநிலைத் தேர்வுக்கான பரீட்சையில்

திரு. சபாபதி சின்னையா நூரசங்காரன்

சிறப்புத் தேர்ச்சியடைந்துள்ளார்.

இவர் பரந்தன் இரசாயனப் பெர்ருள்கள் கூட்டுஸ்தாபனத்தின் முன்னைநாள் முதன்மை மின்னியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது

விளம்பர இலக்கம்: 30866



துன்னாலை வடக்கு அருள்மிகு மிந்திரன்

## கண்ணகை அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம்

இன்று வெள்ளிக்கிழமை
காலை 6.07 – 8.09 மணிவரையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக சிறப்புச் சொற்பொழிவுகள்
சுவாமி சித்ரூப னந்தா
[ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் – பருத்தித்துறை]
இ. ஜெயராஜ்
(அமைப்பாளர் – கம்பன் கழகம்)

பிரசுர அன்பளிப்பு:

சந்துரு புத்தகசாலை
பிரதான வீதி, பருத்தித்துறை.

முருகன் பல்லி ரேடர்ஸ்
மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.

(சி/8140)



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அகிலன் திருச்செல்வம்
(சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)

பிறந்த நாள் 05 - 05 – 1970

இறந்த நாள் 10 – 05 - 1989

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட பாசமலர் அகிலா! அகிலா, அகிலா என்று ஐந்து ஆண்டுகள் தேடுகின்றோம். எங்கு ஐயா ஒளிந்து கொண்டாய். உம் நினைவால் வாடுகின்றோம்.

என்றும் அகிலன் அழியா நினைவுகளுடன் வாழும்:
அன்பு அப்பா, அம்மா, கிறான்மம்மி,
சித்தப்பா அன்ரிமார், தங்கிள்மார்,
சகோதர, சகோதரிகள்.

ச. பாலசிங்கம்,
திருவருள்,
176, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

(சி-8090)



## "யாழ். இந்துக் கல்லூரி மைதான விரிவாக்க நிதிக்காக"

கனகசபை தர்மகுலசிங்கம் ஆதரவில்

"புகழ் பூத்த பின்னணிப் பாடகர்கள்"

யாழ். ரமணனின் ராஜன்ஸ் குழுவினருடன் இணைந்து வழங்கும்

# "இந்து"வின் இன்னிசை மாலை

இடம்:- குமாரசாமி மண்டபம்
காலம்:- 04-06-1994 சனிக்கிழமை
நேரம்:- மாலை 6-00 மணி
அன்பளிப்பு:- ரூபா 1000/- ரூபா 500/-

(சி-8139) – யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில்

# யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ரூபா 70 லட்சம் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 13

யாழ். மாவட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவு திட்டத்தின் கீழ் 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுக்கும் தலா 5 லட்சம் ரூபா வீதம் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

93 ஆம் ஆண்டு தொடர் வேலைகளையும்—

94 ஆம் ஆண்டு வேலைகளையும் — இந்நிதியில் இருந்து மேற்கொள்ளுமாறு யாழ். செயலகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக ஒதுக்கப்பட்ட இந்நிதி முடிவடைந்த வுடன் மேற்கொள்ளப்பட்ட வேலை விவரங்களுடன் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்தால், இறைசேரி மேலும் நிதி வழங்கும் எனவும் — அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-3)

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு 290 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மே 13

யாழ். மாவட்டத்திலிருந்து 290 பேர் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

வடகிழக்குமாகாண கல்விப் பணிப்பாளர் இது தொடர்பான கடிதத்தை யாழ். கல்வித் திணைக்கள வலயம் 1, வலயம் 11 ஆகியவற்றின் பணிப்பாளர்களுக்கு அனுப்பியுள்ளார்.

நேர்முகப் பரீட்சைத் திகதியும் இடமும் மேற்படி கல்வி வலயங்களின் பணிப்பாளர்களால் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும்.

கலைமாணிப் பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை இப்பொழுது நடைபெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோரின் பட்டியலை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15-ம் இலக்கத்தில் உள்ள உதயன் விளம்பரப் பணியகையில் பார்வையிடலாம். (க)

## ஊர்காவலருக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், மே 13

தமிழீழத்தின் எல்லைப் புறங்களில் ஸ்ரீலங்கா அரசினால் நியமிக்கப்பட்ட சிங்கள-முஸ்லிம் ஊர்காவற் படையினருக்குரி - 56 ரகதுப்பாக்கிகள் சுடும் பயிற்சியை அரசு வழங்கிவருகிறது.

பாதுகாப்பு காரணங்களுக்காக ஊர்காவற் படையினருக்கு ரி—56 ரக துப்பாக்கி மூலம் சுடும் பயிற்சி வழங்கப்படுவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

500 ஊர்காவற் படையினர் வீதம் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (ஓ-3)

## தொலைக்கல்வி பயிலுநர் ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், மே 13

சாவகச்சேரி பிராந்தியத்தைச் சேர்ந்த, தொலைக் கல்வி ஆசிரிய பயிற்சி பெறும் சகல பீடங்களையும் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்தில் ஒன்று கூடுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் திரு. மு. யோகராசா கேட்டுள்ளார். (த)


சுழிபுரம் பறாளை

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

மஹோற்சவ கால தெய்வீக அருள் இசைச் சொற்பொழிவு

"கந்தபுராணம்"

14-05-94 சனிக்கிழமை தொடக்கம் 10 நாட்கள் நடைபெறும்.



தினமும் மாலை 4 மணி முதல் 5-15 மணி வரை

நிகழ்த்துபவர்:

நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் "ஞானகதாவாரிதி", அருள்மொழி இசை அரசு, "சைவத்தமிழ் தேனமுதோன்" மூலாய் தந்த மைந்தன் பிரம்மஸ்ரீ சிவ. வை நித்தியானந்த சர்மா ஆசிரியர்

அனைவரும் வருக! இறையருள் பெறுக!!

இடி தர்மகர்த்தா சபை

திருவிழா உபயகாரர்கள்

(30857)

SCIENCE COLLEGE

விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்

96 A/L புதிய பிரிவு

PHYSICS

திரு. ஜெயசீலன் B.Sc. (Hons)

ஆரம்பம்:- 14-05-94 சனி 1-30 p.m.

ZOOLOGY

திரு. B. ஈஸ்வரதாசன் B.Sc. (Cey) Dip In. Ed.

புதிய பிரிவு ஆரம்பம்: 14-05-94 சனி 6.15 a.m.

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(இ-8134)

கலை வர்த்தக கல்லூரி

C.C.A

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

G-C-E A/L 96

புதிய பிரிவு ஆரம்பம் 14-05-94

சனிக்கிழமை காலை 7.00 மணி

ஆசிரியர் குழு

[பட்டப்படிப்புக்களை மேற்கொண்ட எமது வழமையான ஆசிரியர்குழு]

மாணவர்கள் கவனத்துக்கு

சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரையும் வகுப்புக்கள் நடைபெறும் ஒரே நிறுவனம்.

எமது நிறுவன விளம்பரம் எமது நிறுவனத்தில் படித்த மாணவர்களினதும், படிக்கின்ற மாணவர்களினதும் எண்ணிக்கையும் - வர்கள் பெற்ற அதிவிசேட சித்தியுமே.

மாணவர்களின் வேண்டுதலுக்கு இணங்க புதிய பிரிவுக்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

[இ/8088] - நிர்வாகி.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1994-06-06-ம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி:

காவற் பொறுப்பாளர் சக பழுது பார்ப்பவர் (சங்கீதக் கருவிகள்)

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 2745 — 10X55; 7X65 — 3750/- மாதமொன்றுக்கு.

(இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளுடன், 1994-12-31 வரை அடிப்படைச் சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமமான தொகையும் வழங்கப்படும்)

தகைமைகள்:

(அ) இரண்டு தடவைகளிற்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) தேர்வில் 6 பாடங்களில் சித்தி

அல்லது

எட்டாம் வகுப்பில் சித்தியடைந்த மானிய அணைக் குழுவில் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் 5 ஆண்டுகள் நிரந்தர சேவையைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளவர்,

(ஆ) விண்ணப்பதாரி வயலின், சித்தார், எஸ்ராஜ் ஆகியவற்றைப் பழுது பார்த்தலிலும், நரம்புகளைப் பொருத்துவதிலும், தபேலா மிருதங்கம் என்பவற்றில் சிமெந்திடல், அவற்றில் பதனிட்ட தோலைப் பொருத்துதல், ஆர்மோனியத்தையும் இதர உள்நாட்டு சங்கீதக் கருவிகளையும் பழுதுபார்த்தல் என்பவற்றில் ஆற்றல் உடையவராகவும் உயர்கல்வி நிறுவனமொன்றில் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) வழங்கல் பதிவேடுகளைப் பேணுவதிலும், சங்கீதக் கருவிகளைப் பேணிக்காப்பதிலும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:

அடிப்படைச் சங்கீத அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தேர்வு:

செய்முறைப் பரீட்சையின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்,

வயது:

விண்ணப்ப முடிவு திகதியில் 40 வயதிற்கு மேற்படலாகாது.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கட்டுப்பாடாக அமையாது.) 70 வயதுக்கு உட்பட்டவர்களாயின் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்களும் இப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பிக்கலாம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக் கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23X10 ச.மீ. அளவுடைய, சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

1994-05-04

[இ-8132]



BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்

புதிய பிரிவு 96 A/L கலை, வர்த்தகம் கணித, விஞ்ஞான வகுப்புக்கள்

எமது வழமையான ஆசிரிய குழுவினால்

| | |
|---|---|
| பொருளியல் | — உதயன் |
| வர்த்தகம் | — தேவா |
| கணக்கியல் | — ராஜன் |
| அளவையியல் | — S. S. மனோகரன் |
| தமிழ் / இந்துநாகரீகம் | — என் பாலா |
| புவியியல் | — சேரன் |
| இந்து சமயம் | — என். கிருஷ்ணா |
| பௌதீகம் | — ஜெயசீலன் |
| இரசாயனம் | — ஸ்ரீதரன் |
| விலங்கியல் | — கௌசாதரன் |
| தாவரவியல் | — நேசன் |
| தூய / பிரயோக கணிதம் | — பத்மராஜ் |

ஆரம்பம்: 14 - 05 - 1994 சனிக்கிழமை காலை 7 30 மணி

[இ-8091]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வீடு, வளவு விற்பனைக்கு

தாவடி சுதுமலை பிரதான வீதியில் அமைந்துள்ள ''ஸ்ரீபதி'' பெரிய வீடும், 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. ச. ஆறுமுகம், முருகமூர்த்தி கோயிலடி, தாவடி தெற்கு, கொக்குவில். (30849)

### விற்பனைக்கு

ஒன்றரை மாதம் நிரம்பிய அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இல. 222, தெல்லிப்பளை வீதி, வட்டு இந்துக் கல்லூரிக்கு அருகில் சித்தன்கேணி. (30853)

### தேவை

அச்சுக்கோர்ப்பதில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். திருவள்ளுவர் அச்சகம், (யாழ். மாநகரசபை அருகில்) 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (30841)

### தையல் பயிற்சி

ஜனசக்தி வேலைத் திட்டத்தின் கீழ் கோட்டை கிராமிய தையல் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சியை முடித்துக் கொண்ட 30 பெண்களுக்கு யாழ். பிரதேச செயலகத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

# ஐ. தே. கவின் உட்பூசலுக்கு செயலாளர் கூறும் காரணம்

கொழும்பு, மே 13

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப்பிரேரணையைத் தொடர்ந்து ஏற்பட்ட சிக்கலும் எதிரொலியுமே ஐக்கிய தேசியக் கட்சியில் இன்று நிலவும் உட்பூசலுக்குரிய காரணமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா முன் கண்டவாறு தெரிவித்தார்.

''ஐக்கிய தேசியக் கட்சி பதினேழு ஆண்டுகளாகத் தொடர்ந்து பதவியில் இருந்ததால் எம்மால் யதார்த்த நிலையை உணர முடியாது போயிற்று. தென்மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி எமது கண்களைத் திறக்கவைத்தது. கட்சிக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாக இத்தோல்வி அமைந்தது''— என்றும் அவர் கூறினார்.

(த-எ)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L DAY CLASSES
(8-30 — 2-00)

## புதிய 5 ஆம் பிரிவு

## ஆரம்பம்: 16 - 05 - 1994
(திங்கள்) காலை 8-30மணி

❋ திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.

[சி/8094]

# தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

# கிளைக்குழுத் தேர்தல் — 1994

## கிளைகளின் விவரம்

| கிளை இல. | கிளையின் பெயர் | கிளை இல. | கிளையின் பெயர் |
|---|---|---|---|
| 01 | தெல்லிப்பளை | 23 | பளாலி கிழக்கு |
| 02 | துர்க்காபுரம் | 24 | மயிலிட்டிக் கரை |
| 03 | வவுணாவத்தை | 25 | மயிலிட்டி கிழக்கு |
| 04 | விராங்கொடை | 26 | மயிலிட்டி வடக்கு |
| 05 | பன்னாலை | 27 | காங்கேசன்துறை |
| 06 | விழிசிட்டி | 28 | பளை வீமன்காமம் |
| 07 | கருகம்பனை | 29 | வீமன்காமம் |
| 08 | இளவாலை | 30 | தையிட்டி |
| 09 | கீரிமலை | 31 | ஊறணி |
| 10 | சீமெந்துத் தொழிற்சாலை முன்பாக (காங்கேசன்துறை) | 32 | பளாலிச் சந்தி |
| 11 | நடேஸ்வராக் கல்லூரி அருகாமை (காங்கேசன்துறை) | 33 | மடத்தடி |
| 12 | மாவிட்டபுரம் | 34 | அரசினர் வைத்தியசாலை அருகாமை (தெல்லிப்பளை) |
| 13 | அரசடிவீதி, மாவிட்டபுரம் | 35 | கலட்டி |
| 14 | கொல்லங்கலட்டி | 36 | வசந்தபுரம் |
| 15 | வறுத் தலைவிளான் | 37 | ஊரங்குணை |
| 16 | கட்டுவன் | 38 | மாங்கொல்லை |
| 17 | குரும்பசிட்டி | 39 | குட்டியப்புலம் |
| 18 | வசாவிளான் | 40 | குரும்பசிட்டி கிழக்கு |
| 19 | ஒட்டகப்புலம் | 41 | கினானை |
| 20 | வசாவிளான் சந்தி | 42 | திருப்பூர், மயிலிட்டி |
| 21 | பளாலி மேற்கு | 43 | சிந்திபபந்தல் |
| 22 | பளாலி மத்தி | 44 | மயிலங்கூடல் |

நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: ] — 21 - 05 - 1994 சனிக்கிழமை

நேரம்: காலை 9மணி தொடக்கம் காலை 10 மணி வரை

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் இடம்:

சகல கிளைகளுக்கான (01 தொடக்கம் 44 வரை) நியமனப் பத்திரங்கள் "யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை", உடுவில் வீதி, மானிப்பாயில் ஏற்றுக்கொள்ளப்படும்.

அபேட்சகர் நியமனங்களில் ஆட்சேபனை எதுவும் இருப்பின் அன்றைய தினம் காலை 10-00 மணி தொடக்கம் காலை 11 00 மணிக்கிடையில் தேர்தல்/உதவித் தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்து மூலமாக ஒப்படைத்தல் வேண்டும்.

தேர்தல் இருப்பின் தேர்தலும் வாக்களிப்பும் ] — 28 - 05 - 1994 சனிக்கிழமை

நேரம்: காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை

இடம்: யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, உடுவில் றோட், மானிப்பாய்

● குறிப்பு: நியமனப் பத்திரங்கள் 14-05-1994 தொடக்கம் சகல விற்பனை நிலையங்களிலும், நிவாரணக் கிளைகளிலும் தலைமைக் காரியாலயத்திலும் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. சின்னத்தம்பி,
தேர்தல் உத்தியோகத்தர்.

பிரதேசச் செயலகம்,
வலி - வடக்கு, தெல்லிப்பளை.

[சி/8137]

# விண்ணக வாழ்வின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 16 — 08 — 1985

இறப்பு: 13 — 05 — 1991

## செல்வி றோசானி சிவபாலன்

கண்மணியே கலங்குகிறோம் உனை இழந்து.

தாய்: திரேசம்மா,
தங்கை: சிந்துஜா,
பேரன், உறவினர்.

24, 1ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம். (30848)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 03 — 1932

மறைவு: 24 — 04 — 1993

## செல்வி தனலட்சுமி தம்பியப்பா
(இளைப்பாறிய ஆசிரியை யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

திதி: 13 — 05 — 1994

அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது. இறையடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

தாய், சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள்.

''சிவ பவனம்''
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (30856)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 04 — 04 — 1967

விண்ணின் பிடியில்: 30 — 03 — 1994

அமரர்

## அந்தோனிப்பிள்ளை எட்மன் அமலதாஸ்
(ஜேர்மனி)

எமது அருமைத் தம்பியே! ஆருயிர் மாமாவே!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே - உன்
சாந்தம் தவழும் அன்பு முகம் காணாது - எமது
இதயம் ஏங்குதையா — உன்
அன்புமொழி கேளாது - நாம்
கலங்கித் தவிக்கின்றோம் ஐயா!
எம்மையெல்லாம் உன் அன்புச் சிறையில்
வைத்துவிட்டு எங்கு பறந்து சென்றாய் ஐயா — உன்
உடன் பிறந்த சகோதரி துணையின்றிவாட - எங்கு
சென்றாய் என் பிறவியே - நீ எம்மையெல்லாம்
விட்டுச் சென்றாலும் — எம் நெஞ்சங்களில்
என்றும் வாழ்வீர் எம் குலவிளக்கே!

30-03-94இல் ஜேர்மனியில் அகால மரணமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இன்று 13-05-94 பிற்பகல் 4-30 மணிக்கு கூழாவடி அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

நித்தமும் உம் நினைவலைகளுடன் வாழும்:
அருமை அக்கா, அத்தான், மருமக்கள்.

கு. பங்கிராஸ்,
புனித நீற்றா கோயிலடி,
இளவாலை. (30815)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/3, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மண்டேலாவுக்கு கடும் பரீட்சை!

ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று தென் ஆபிரிக்காவின் புதிய ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஈழத் தமிழர்கள் தமது சுதந்திரத்துக்காகப் போராடி வருகிறார்கள் என்பதையும், அந்தச் சுதந்திரப்போரை முறியடிப்பதற்காக ஸ்ரீலங்கா அரசு, முன்னைய தென்னாபிரிக்க அரசின் அனுசரணையுடன் அங்கிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வந்தது என்பதனையும் விடுதலைப் புலிகள் திரு மண்டேலாவுக்கு நினைவுபடுத்தி உள்ளனர்.

தமது நீண்ட போராட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் தேசபிதாவாக, ஆட்சித் தலைவராக பதவியில் அமர்ந்து விட்டாலும் மண்டேலா உள்நாட்டில் பல சோதனைகளையும், சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தமது நாட்டு இராணுவத்திலும், நிர்வாகத்துறையிலும் நிலவும் வெள்ளையர் ஆதிக்கத்தை நீக்குவது தொடக்கம் பொருளாதார, வேலை வாய்ப்புகளில் சமத்துவ நிலையை உண்டாக்குவது வரை வெள்ளையர் மற்றும் கறுப்பினத் தீவிரவாதிகளை அடக்கி அரசியல் சமரச சமாதான நிலையை தோற்றுவிப்பது என்று எண்ணிலடங்கா உள்நாட்டுப் பிரச்சினைகள் அவர் நெஞ்சை நோக்கிவரும் அம்புகளாக உள்ளன.

இத்தகைய ஒரு பின்னணியில், விடுதலைப் புலிகள் திரு. மண்டேலாவிடம் விடுத்த வேண்டுகோள் அவருக்கு முதலாவது கொள்கைப் பிரச்சினையைக் கொடுத்துள்ளது. அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை நடத்தி வென்ற மண்டேலா அத்தகைய ஏனைய போராட்டங்களுக்கு உதவுவாரா என்பதனை உரைத்துப் பார்க்கும் ஒரு பரீட்சையாகக் கூட இது அமைகிறது.

தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு பயங்கரவாதம் என்று பெயரிட்டு, உலக நாடுகளை ஏமாற்றி அவற்றிடம் ஆயுதங்களை வாங்கியும், பண உதவி பெற்றும் வரும் ஸ்ரீலங்கா அரசு, தென்னாபிரிக்க இன ஒதுக்கல் அரசின் அனுசரணையோடு அங்கிருந்து பெருமளவு ஆயுதங்களை வாங்கியது. புதிய தொகுதி ஆயுதங்களை வாங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கூட அங்கு அண்மையில் சென்றிருந்தார்.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களை அடக்கி ஆண்ட பிரிட்டோரியா அரசு, தமிழ் மக்களை அடக்கி ஆளும் ஸ்ரீலங்கா அரசுடன் கைகோர்த்துச் செயல் ஆற்றியது இனம் இனத்தைச் சேர்வதில் வியப்பில்லைத்தான்!

அதேபோல, மண்டேலாவும் தன்னைத் தொடர்ந்தும் ஒரு சுதந்திரப் போராட்ட வீரனாகவே கருதி, தமது சுதந்திரத்துக்காகப் போராடும் தமிழர்களுக்கு உதவ வேண்டும்.

விடுதலைப் புலிகள் மண்டேலாவிடம் முன்வைத்துள்ள கோரிக்கை அவர் மனதில் இரண்டு வகை கேள்விகளை எழுப்பும். ஆயுதம் விற்று தனது நாட்டுக்குப் பணம் சேர்ப்பதா அல்லது விடுதலைப் போராட்டத்தை ஆதரித்துக் கொள்கை வீரனாகத் திகழ்வதா என்பது ஒரு கேள்வி.

இலங்கையில் உத்தியோக பூர்வமான ஸ்ரீலங்கா அரசுக்கு உதவுவதா அல்லது விடுதலைக்காகப் போராடும் தமிழர்களை ஆதரிப்பதா? — என்பது இரண்டாவது கேள்வி.

புதிதாக ஆட்சிக்கு அதிகாரத்துக்கு வந்த மண்டேலாவின் தலையைப் பிய்க்கும் கேள்விகளாக இவை அமையப் போகின்றன. அவர் வெறும் அரசியல்வாதியா அல்லது உலகத் தேசியவாதியா என்பதனைச் சோதிக்கும் மிகக் கடுமையான பரீட்சையாகவும் இது விளங்கப் போகிறது!

## பாதாள உலக நபர்கள் குறித்து டி. பி. கடும்போக்கு

கொழும்பு, மே 13

''பாதாள உலக''த்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய தயங்குகிறவர்களையும், எதிர் நடவடிக்கை மேற்கொள்ள தயங்குபவர்களையும் உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு ஜனாதிபதி விஜேதுங்க பொலிஸ் மா அதிபருக்கு பணித்துள்ளார்.

நிறையுடைய நேர்மையான அதிகாரிகளை இப்பணியில் ஈடுபடுத்துமாறும் ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை —

கொழும்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் இரு பாதாள உலகக் கும்பல்களின் தலைவர்களிடமும் நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் உள்ளன என்றும் —

அவற்றைப் பயன்படுத்தியே அவர்கள் பொலிஸாரிடம் பிடிபடாது தப்பி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

'சொத்தி' உபாலி மற்றும் தம்மிகா ஆகிய இரு தலைவர்கள் நவீன ஆயுதங்களை வைத்துள்ளனர் என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னரும் மோதினர்

உபாலியும், தம்மிகாவும் கடந்த 3ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றத்தில் மோதியதையடுத்து கொள்ளுப்பிட்டி, வனாத்தமுல்லை பகுதிகளிலும் மோதியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொள்ளுப்பிட்டியில் நடந்த மோதலில் இருவர் காயமடைந்ததாகவும் —

வனாத்தமுல்லையில் நடந்த மோதலில் எவரும் காயம் அடையவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் 'பாதாள உலகில்' இயங்கும் குழுக்களைச்சேர்ந்த தலைவர்களும் அவர்களின் சகபாடிகளும் நாட்டைவிட்டு தப்பி ஓடாமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் உஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது என்றும் —

இதுவரை கைதான சந்தேக நபர்கள் எவரையும் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அரசியல் காரணங்களுக்காக விடுவிக்கக் கூடாது என்றும் அரசாங்க உயர் தலைமை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ-3-9)

## 'பாதாள உலக' நபர்களில் 15 பேர் இதுவரை கைது

கொழும்பு, மே 13

பாதாள உலக'' நபர்களில் இதுவரை பதினைந்து பேரை தாம் கைது செய்து விட்டதாகவும் —

அவர்களில் ஆகக் குறைந்தது இருவர் கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் — பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் சில அரசியல்வாதிகளுக்காக கொலைகள் செய்தனர் என்பதற்கு சாட்சியம் உண்டு என்றொரு வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை —

'பாதாள உலக' கிரிமினல் குழுக்களின் தலைவர்களிடம் அவர்களது அரசியல் ஆசான்களால் வழங்கப்பட்ட துப்பாக்கிகள், கானியங்கி ஆயுதங்கள், பிஸ்டல்கள் மற்றும் கிரனேட்டுக்கள் இன்னும் உள்ளன என்று பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

இதன் காரணமாக இவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவது என்பது இலகுவான பணியாக இருக்காது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### இராணுவப் பயிற்சி நிலையத்தில்

## கிரனேட் வெடித்ததில் 7 படையினர் காயம்!

கொழும்பு, மே 13

பொலன்னறுவை, மாதுறு ஓயா இராணுவப் பயிற்சி நிலையத்தில் கடந்த சனிக்கிழமை காலை 8 மணியளவில் தற்செயலாக கிரனேட் ஒன்று வெடித்த போது ஏழு படையினர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினர் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே இந்த விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த படையினரில் ஒருவர் லெப்டினன்ட், ஒருவர் சார்ஜன்ட், இரண்டு கோப்பரல்கள், மூன்று சிப்பாய்கள் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்தவர்களுக்குள்ளான நான்கு படையினருக்கு அவசர அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டதால், பொலன்னறுவை மருத்துவ மனைக்கு முதலில் விமான மூலம் கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து காயமடைந்த லெப்டினன்டும் 3 படையினரும் விமானமூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டனர்.

மின்னல் தாக்கியதால் பொலன்னறுவ மருத்துவ மனையில் சத்திரசிகிச்சை அறையில் பொருத்தப்பட்டிருந்த குளிர்சாதன வசதிகள் மற்றும் தொலைபேசித் தொடர்புகளும் பழுதடைந்திருந்தமை இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

### எம். பிக்களை அழைத்து

## மாவட்ட குறைபாடுகளை கேட்டறிந்தார் டி. பி

கொழும்பு, மே 13

மாவட்ட ரீதியாக நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து மாவட்டங்களில் நிலவும் குறைபாடுகள் பற்றி கேட்டறிந்து நிவாரணம் வழங்குவதில் ஜனாதிபதி விஜேதுங்கா ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை பன்னிரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த எம். பிக்களை ஜனாதிபதி சந்தித்திருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## மாத்தளை மாநகர மேயர்; ரகசியபொலீஸ் விசாரணை

கொழும்பு, மே 13

மாத்தளை மாநகரசபையின் ஐக்கியதேசியகட்சி உறுப்பினர் ரஸ்மர் ஹூசேன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக மாநகரசபை மேயர் ரஞ்சித் அலுவிஹாரா இரகசியப் பொலிஸாரினால் துருவித்துருவி விசாரணை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக நாற்பதுக்கும் அதிகமானோர் விசாரணை செய்யப்பட்டனர். அவர்களின் இரண்டு மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபைச் செயலாளர், சபை ஊழியர் சிலரும் இருந்தனர்.

இன்னொரு மாநகரசபை உறுப்பினர் எம். ஆர். ஔபர் தின் (ஐ. தே. க.) விசாரிக்கப்படுவதற்காக கொழும்புக்குக் கூட்டிவரப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

மாநகரசபை உறுப்பினர் மொஹான் வீரக்கூனுக்கு கிடைத்த அனாமதேய தொலைபேசிப் பயமுறுத்தல் தொடர்பாகவும் இரகசியப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கொலை செய்யப்பட்ட ரஸ்மர் ஹூசேனின் நெருங்கிய சகா வீரக்கூன் ஆவார். (இ-எ)

## ஜனாதிபதியின் அனுமதி இன்றி வெளிநாடு சென்றால் எம். பி பதவி பறிபோகும்!

ஜனாதிபதி விஜேதுங்காவின் முன் அனுமதி பெறாது வெளிநாடு செல்லும் அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடு திரும்பியதும் எம். பி பதவியில் இருந்தும் கட்சி உறுப்பினர் பதவியில் இருந்தும் அகற்றப்படுவார்கள்.

இவ்வாறு ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்திய சிகிச்சைக்காக மட்டும் வெளிநாடு செல்லும் எம். பிக்களுக்கு இத் தடை உத்தரவில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இத் தடை உத்தரவு குற்றங்கள் புரிந்ததாக கூறப்படும் அரசியல்வாதிகள் விஷயத்தில் கடுமையாக அமுல் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சில தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களைத் தவிர மற்றப்படி அரச எம். பிக்கள், அமைச்சர்கள், அரச அதிகாரிகள் ஜனாதிபதியின் முன் அனுமதி பெறாது வெளிநாடு செல்வது இம் மாதம் முதலாம் திகதி முதல் [illegible] செய்யப்பட்டுள்ளது [illegible] த்து.

### புலிகளின் குரல் வானொலியில்

13 - 05 - 1994

வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாகும் நூல்கள் ''சிலமனிதர்கள்'' — கதைத் தொகுதி ''பொறி'' — கவிதைத் தொகுதி அடுத்து சிறுகதை ''விடுதலை'' அதனையடுத்து கவிதைகள்

★ தானைத் தலைவன்

★ உலகச்செய்திகள்

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — அரசியல் அரங்கம் — ''கூரேயின் உடலுக்குள் கூடுவிட்டு கூடு பாயும் பிரேமாவின் ஆவி''

★ 8-50 — வர்த்தகங்கள்

14 - 05 - 1994

சனி காலை

★ 7-03 — மாவீர வணக்கம்

★ 07-15 — நேயர் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 07-45 — நேயர் கேட்டவையின் தொடர்ச்சி

### பிரேமா சிலை விவகாரம்;

## அடிப்படை உரிமை மீறல் வழக்கை நீதிமன்றம் ஏற்றது

கொழும்பு, மே 13

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிலை எழுப்புவதற்காக தமது அலுவலகக் கட்டடத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபை தரைமட்டமாக்கியதை எதிர்த்து அளுத்கடை சட்டத்தரணி பட்றிக் அன்ரனி லூக்கஸ் பெர்னாண்டோ தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் இச்செயலால் தமக்கு ஏற்பட்ட தொழில் இழப்பு மற்றும் நட்டங்களுக்காக ஒன்றரைக் கோடி ரூபா நட்டஈடாக வழங்கும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிடும்படியும் மனுதாரர் தமது மனுவில் கோரியுள்ளார்.

மனுவில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, அதிகாரசபையின் மேலதிக செயலாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டுள்ளனர். (த-எ)

### வவுனியா கல்விக் கல்லூரியின்

## நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், மே 13

வவுனியா கல்விக் கல்லூரியில் ஆரம்ப விஞ்ஞான, உடற்கல்வி பயிற்சி நெறியில் (1994) அனுமதி பெறுவதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவான பரீட்சார்த்திகளின் விவரம் நேற்றைய உதயனில் வெளியிடப்பட்டது இங்கு அதன் தொடர்ச்சி வெளியாகின்றது.

ஆரம்பக் கல்வி பாடநெறி
(ஆண்கள்)

வி. நவமோகன் யாழ்ப்பாணம், வி. உதயகுமார் வரணி, கே. சுதர்சன் கொக்குவில் மேற்கு, பி. குமாராஜசிங்கம் கந்தர்மடம், எஸ். ராஜேந்திரன் காரைநகர், ஆர். ராஜரான் கொக்குவில் மேற்கு, கே. தவச்செல்வன் வதிரி, ஏ. தயாநிதி தெல்லிப்பளை, எம். சுதேஸ் யாழ்ப்பாணம், ஜே சாமிஸ் கெனடி யாழ்ப்பாணம், ஆர் ரமேஸ்குமார் தெல்லிப்பளை,

ஆரம்பக் கல்வி பாடநெறி
(பெண்கள்)

எஸ் செல்வாம்பிகை புலோலி கிழக்கு, பி. சத்தியமாலா ஏழாலை, வி. விஜயலக்சுமி நீர்வேலி, எஸ். பாலநந்தி நல்லூர், வி. திபாவரீஸ்வரி ஆவரங்கால் [illegible], ரி. உஷா புலோலி, ரி. ஜெயபாரதி எழுதுமட்டுவாழ், வி. பிறேமலதா புலோலி தெற்கு, வி. மாலினி மிருசுவில், மீ. மோகன சிறிவாணி ஊரெழு மேற்கு, ஜே ஜெயசித்திரா புலோலி கிழக்கு, வி. அம்பிகா சித்தன்கேணி, எம். சுவேந்திராதேவி கரவெட்டி மேற்கு, கே. மகேஸ்வரி செம்பியன் பற்று, என். சிவரஞ்சினி நீர்வேலி, வி. சிவருபினி புன்னாலைக்கட்டுவன், எஸ். யோகநாதன் வண்ணார் பண்ணை மேற்கு, கே. சுதர்சினி சிறுப்பிட்டிகிழக்கு, எஸ் சர்மினா கோப்பாய் வடக்கு, ஏ பிறேமினி கரவெட்டி, எஸ் கோமதி சிறுப்பிட்டி சென்ரர், ஆர் ஜெயதேவி சுழிபுரம், ரீ. நந்தினி காரைநகர், கே. அனுசா இணுவில், என். சித்திரகலா அளவை தெற்கு, ஏ. கலைவாணி கரணவாய் தெற்கு, ஏ. ஜே. அந்தோனிப்பிள்ளை யாழ்ப்பாணம், என். சரோஜா பாசையூர், எஸ் வனிதா வராத்துப்பளை எஸ் சுபாசினி உடுவில், கே. சேது அச்சுவேலி, பி. கந்தசாமி துன்னாலை கிழக்கு, எம் மனோகரி உரும்பிராய் தெற்கு, ஆர், வனிதா புலோலிதெற்கு, கே. பாலவதனி சிமோன் யாழ்ப்பாணம், பி. மசிலின் தாவடிச்சந்தி.

(முற்றும்)

(இ-எ)

## எமது அரசியல் வாதிகளுக்கு நரகலோகமே கிடைக்கும்

### ஆரியரத்தினா சொல்கிறார்

கொழும்பு, மே 13

இந்த நாட்டின் பெரும்பாலான அரசியல் வாதிகள் 'அசுரலோகம்' என்றழைக்கப்படும் விசேட நரகத்துக்குத் தான் செல்வார்கள்.

சர்வோதய தலைவர் டாக்டர் ஏ. ரீ. ஆரியரத்னா, கொழும்பு, முகத்துவாரத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''கட்சி அரசியலில் இருந்து விலகி அரசியலுக்கு அப்பாற்பட்ட நிறைவேற்று ஜனாதிபதியாக வருமாறு 1983 இலே நான் ஜே ஆர். ஜெயவர்த்தனாவை [illegible]

இரண்டு அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒன்று அரசியலுக்கு அப்பாற்பட்டவராக ஜனாதிபதி இருக்க வேண்டும். இரண்டாவது தமது கட்சியின் நலனை பாதுகாப்பதை விடுத்து அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் அமைச்சரவையை ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (த-எ)

### பிரேமா நினைவாக

## பிரதேச செயலர் பிரிவுகளில் கிராமிய வேலை திட்டங்கள்

கொழும்பு, மே 13

முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற பிரேமதாசாவின் நினைவாக நாட்டில் உள்ள எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் கிராமிய மட்டத்திலான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு உணவு, கூட்டுறவு ஜனசக்தி அமைச்சர் விரசிங்க மல்லிமராட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

நாட்டில் அமுலில் உள்ள 15 ஆயிரம் வேலைத் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

சிரமதான அடிப்படையில் இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும், சிரமதான வேலைத்திட்டத்திற்கு ஆதரவு கிடைக்காத பட்சத்தில் 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படும் என்றும், உணவு, கூட்டுறவு, ஜனசக்தி அமைச்சர் பிரதேச செயலாளர்களுக்கு கடந்த மாதம் 19ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர்கள் தமது பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் கிராமிய மட்டத்திலான நிகழ்ச்சி திட்டங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் சுற்று நிருபத்தில் கோரப்பட்டுள்ளது. (த-17)

## லஞ்சமாக அழகிய பெண்: அரச அதிகாரி கேட்டாராம்

அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிக்கு நஷ்டஈடு வழங்குவதை அங்கீகரிப்பதற்காக 84 ஆயிரம் ரூபா பணத்தையும் அழகிய பெண் ஒருவரையும் லஞ்சமாகக் கேட்ட உயர்நிலை அரச அதிகாரி ஒருவர் பொலன்னறுவை மாவட்டத்தில் லஞ்சத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரான அதிகாரி பணத்தையும் பெண்ணையும் பெற்றுக் கொண்ட சமயம் லஞ்ச அதிகாரிகள் அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர். அப்பெண் லஞ்சத் திணைக்களத்தின் உளவாளியாக அப்போது செயல்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட காணியை அந்த அதிகாரி மதிப்பீடு செய்து 15 லட்சம் ரூபா நட்டஈடாக வழங்கலாம் என்று காணி உரிமையாளருக்குத் தெரிவித்திருந்தார். எனினும் 9 லட்சம் ரூபா மட்டுமே தம்மால் நட்டஈடாக வழங்க உத்தரவிட முடியும் என்றும் அந்த அதிகாரி கூறினார் என்றும் —

நட்ட ஈட்டுப் பணத்தில் முதலாவது தவணையாக ஒரு லட்சத்து 66 ஆயிரம் ரூபாவை விடுவிக்க 84 ஆயிரம் ரூபாவும் அழகிய பெண் ஒருவரையும் லஞ்சமாகத் தரவேண்டும் என்று அவர் உரிமையாளருக்கு நிபந்தனை விதித்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

காணி உரிமையாளர் லஞ்சத் திணைக்களத்துக்குச் செய்த முறைப்பாட்டின் மீது அந்த அதிகாரி கைது செய்யப்பட்டார், அவரை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு பிரதம நீதிவான் சரத் அம்பேபிற்றிய உத்தரவிட்டார். [த-எ]

### இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்ட

## 177 மீன்பிடிப் படகுகளை விடுவிக்க நடவடிக்கை

கொழும்பு, மே 13

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு சொந்தமான 177மீன்பிடிப் படகுகளில்,சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப் படாத வற்றைவிரைவில் விடுவிக்கநடவடிக்கை எடுக்கப் படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த 177 படகுகளையும் விடுவிப்பது தொடர்பாக புதுடில்லியில் உள்ள மத்திய அரசு அதிகாரிகளும் தமிழ் நாடு அதிகாரிகளும் ஆராய்ந்தனர். அப்போதே முன்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படகுகளை இந்திய அரசு விடுவிக்கும் பட்சத்தில் தமிழ்நாடு அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவிப்பர் என்று கடந்த மாதம் புதுடில்லி சென்ற இலங்கை அதிகாரிகள் குழு புதுடில்லி அதிகாரிகளிடம் தெரிவித்ததாக கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஸ்கட் தாக்குதலில் 20பேர் பலி!

சானா, மே 13

வடயேமன் தலைநகர் சானா மீது நடத்தப்பட்ட ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப் பட்டனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

தென் யேமன்படையினரால் நேற்று முன்தினம் அதிகாலை ஏவப்பட்ட ஸ்கட் ஏவுகணை ஒன்று ஜனாதிபதி முகமது சாலியும் அவரது நேச சக்திகளும் பயன்படுத்தி வந்த வீடு ஒன்றின் மீது விழுந்து வெடித்தது அந்த வீட்டை இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஊழியர் சேமலாப நிதியம் மீதான வரிகள் நீக்கப்படும்?

கொழும்பு, மே 13

ஊழியர் சேமலாப நிதியத்தின் முதலீடுகளின் மீது அரசு விதித்துள்ள வருமான வரி மற்றும் பாதுகாப்பு வரி ஆகியவற்றை அகற்றும் படி தொழில் அமைச்சர் எம். எச். எம். அபுசாலி அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரவைக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை தனது இச் சிபார்சை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஊழியர் சேமலாப நிதிக்கு தற்போது வழங்கப் படும் வட்டியை 16 சதவீதம் வரை அதிகரிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் முதலீடுகளின் பேரால் 92 கோடி ரூபா வருமான வரியாகவும்- 13 கோடி 80 லட்சம் ரூபா பாதுகாப்பு வரியாகவும் செலுத்தப்படுகின்றது.

ஊழியரின் கடும் உழைப்பினால் சேமிக்கப்பட்ட பணத்துக்கு விதிக்கப்படும் வரியாக இதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இவ்வரிகளில் இருந்து விலக்களிக்கும் பட்சத்தில், ஊழியர் சேமலாப நிதியின் வட்டி வீதத்தை 16 சதவீதமாக அதிகரிக்க முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியின் வட்டி வீதத்தை அரசாங்கம் இம்மாதம் முதல் 11.5 சதவீதத்தில் இருந்து 13.5 சதவீதமாக அதிகரித்திருப்பது தெரிந்ததே ஊழியர் சேமலாப நிதிக்கு மாதம் 60 கோடி ரூபா திரட்டப்பட்டு வருகின்றது. (த-எ)

## கிடுகுக்கு தட்டுப்பாடு

தென்மராட்சி, மே 13

தென்மராட்சிப் பகுதியில் கிடுகுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் கிடுகின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேங்காயின் விலை பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளது. தென்மராட்சிப் பகுதி சந்தைகளில் ஒரு தேங்காய் பத்துருபாவாக விற்கப்படுகிறது. (த-117)

குளம் இல்லா ஊருக்கு பசுமை இல்லை
நீரில்லா ஊருக்கு நிறைவு இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஸ்ரீதரில்....

தினசரி மாலை 3 மணி, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30 மணி, மாலை 3 மணி, 6 மணி

## 'காற்று வெளி'

இத்துடன்

மார்ச் 94

## "ஒளிவீச்சு"

காண்பிக்கப்படும்

16 - 05 - 94 முதல்

## 'மண்ணுக்காக'

(சி-8133)



## JAFFNA COLLEGE

### INTER HOUSE ATHLETIC MEET

Will be held on
Staurday 14th at 2.30 p.m.
At Bicknell Stadium

Chief Guests
DR. & MRS.
T. W. JEYAKULARAJAH

Alumni, Parents and Friends are Cordially Invited

G. RAJANAYAGAM
Principal

(C-8141)


# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சொர்ணலிங்கம்

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சொர்ணலிங்கம் 12-5-94 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசம்மா அவர்களின் மகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சேதாரலிங்கம் (ஜேர்மன்), காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் சகோதரரும், லிங்கேஸ்வரி, லிங்கேஸ்வரன், விமலராஜ், சொர்ணேஸ்வரி, சுதேஸ்வரி, சுதேஸ்வரன் (எல்லோரும் ஜேர்மன்), மங்களேஸ்வரி, சொர்ணேஸ்வரன், தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனும், ரவீந்திரன், காட்சாயினி, கிருபாகரன் (எல்லோரும் ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இலக்கியா, கீர்த்தியா, அபிநயா, பிரசன்னா (எல்லோரும் ஜேர்மன்) ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
திருமதி. சொ. ராஜேஸ்வரி (மனைவி)

மடத்தடி லேன்,
கல்வியங்காடு.

(30862)

## திருமதி நடராசா சிவஞானவல்லி

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நடராசா சிவஞானவல்லி 12-05-94 இல் காலமானார்.

அன்னார் திரு. நடராசா (இளைப்பாறிய ஆசிரியர், விக்டோறியாக் கல்லூரி சுழிபுரம்) அவர்களின் அன்பு மனைவியும், திரு தி. ரூபராணி தேவராஜன், விமலராணி, யோகராஜா (இங்கிலாந்து), திருமதி ச. கமலராணி (இங்கிலாந்து), விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ஈஸ்வரதாசன் (தொழிற்சாலை உத்தியோகத்தர், தலவாக்கலை எஸ்டேட்), திரு. சதாசிவம், ஸ்ரீ ஜெயதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தர்ஷிகா அருணாசலம், ரேணுகா, தயாளன், சஜன், நிரோஷன், மோகன், அருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை (14-5-94) 11-00 மணிக்கு கட்டுடை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திரு தா. நடராசா

கட்டுடை,
மானிப்பாய்

(30861)

## சண்முகப்பிள்ளை ஞானமூர்த்தி

சண்முகப்பிள்ளை ஞானமூர்த்தி (ஓய்வுபெற்ற தபால் அதிபட்சகர் யாழ்ப்பாணம், முன்னைநாள் வல்வை நகரசபைத் தலைவர்; சமாதான நீதவான்) அவர்கள் 11-5-94 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் இரத்தினாபாயின் அன்புக் கணவரும், ஞா. வேலாயுதம் (லண்டன்), ஞா. சோதிலிங்கம் (ஜேர்மனி), ஞா. விமலசர் (லண்டன்), ஞா. சின்னத்துரை (ஜேர்மனி), ஞா. மனோகரன் லண்டன், காலஞ்சென்றவர்களான திருமதி வேலாயுதம் தையல்நாயகி, ஞா. ஆனந்தகுமரேசன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு கு. வேலாயுதம் (ஓய்வுபெற்ற மீன்பிடி இலாகா பரிசோதகர்) அவர்களின் அன்பு மாமனாரும்; காலஞ்சென்றவர்களான திரு ச. பாலசுப்பிரமணியம், திருமதி சோ. தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-5-1994 நேற்று மாலை 5 மணிக்கு வல்வை ஊறணி மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. மீனாட்சிசுந்தரம் (பெறாமகன்)

கிழக்குத்தெரு,
வல்வெட்டித்துறை

(30865)

## மாவீரர் உருவப்படம் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், மே 13

மன்னார் மாவட்ட மாதிரிக் கிராமம் என்னும் இடத்தில் ஏற்பட்ட வெடி விபத்தின் போது வீரச்சாவடைந்த மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேணல் வேணு, மேஜர் சயந்தன், மேஜர் குகன், கப்டன் குட்டிமணி — பூநகரி காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த மேஜர் அர்ச்சுன் [விவேகன்] ஆகியோரினது உருவப் படங்கள் இன்று 13 ஆம் திகதி மாலை 5 மணியளவில் சுண்டுக்குழி சந்தியில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட உள்ளன. (இ-9)

## விளையாட்டு நிகழ்வுகள்

நல்லூர் பிரதேச செயலக ஊழியர்கள் அணிக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஊழியர்கள் அணிக்கும் இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (த-143)

★ ★ ★

சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டை அம்பாள் சனசமூக நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள் நாளை காலை 6 மணிக்கு ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியுடன் ஆரம்பமாகும். மாலை 4 மணிக்கு 'பி' பிரிவுக்கான தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நிலைய மைதானத்தில் நடைபெறும். போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தபுரி அணி மோதும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 13

ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி — காட்சி ஆட்டம் — ஞான முருகன் வி. க. அணி எதிர் ஸ்கந்தா வி. க. அணி.

★ 4.30 அரையிறுதி ஆட்டம் — அரியாலை ஐக்கிய வி. க. அணி எதிர் பாஷையூர் அன்ரனீஸ் வி. க. அணி

(இ-3-20)

பம்பலப்பிட்டி (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொத்தி உபாலியைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை— சொத்தி உபாலி வசித்ததாகக் கூறப்படும் கொட்டுகாஸ்தோட்டை, கஹலகமவில் உள்ள வீடொன்றை சோதனையிட்ட கட்டுகாஸ்தோட்டைப் பொலீஸார் அங்கிருந்த சொத்தி உபாலியின் மூன்று சகோதரர்களைக் கைது செய்தனர் என்றும் அங்கு வைக்கப்பட்டிருந்த 30 ரவைகளையும் பொலீஸார் கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தி உபாலியின் தலைமையனாரான ஹற்றவத்தை என்பரே என்பவர் நேற்று முன்தினம் நண்பகல் விசேட பொலீஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டார் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

(இ-எ-6)


# A/L 96

## புதிய பிரிவு

ஆரம்பம்:
14-05-94
(7 மணி)

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்


# ஜனாதிபதி பணிப்பின் பேரிலேயே

# பெரும் தேடுதல் வேட்டை

## சொத்திஉபாலி கைது குறித்து மேலும் தகவல்

கொழும்பு, மே 13

ஜனாதிபதி விஜேதுங்காவின் பணிப்பின் பேரிலேயே பொலிஸார் பாரிய தேடுதல் நடத்தி சொத்தி உபாலி கோஷ்டியினரைக் கைது செய்தனர்.

மேற்கண்ட தகவலை பி.பி.ஸி. சிங்களச் சேவையில் எல்மோ பெர்னாண்டோ வெளியிட்டார்.

ஐ.தே.கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராக சொத்தி உபாலி இருக்கிறார் என்றும் —

பல கொலை, கொள்ளைகளில் இவர் ஈடுபட்டபோதும் அரசியல்வாதிகளின் ஆதரவில் தப்பி வந்தார் என்றும் —

அமைச்சர் சிறிசேன கூரேயின் செல்வாக்கு ஐ.தே.கட்சியில் குறைந்து வருகையில் அவர் கைதானது முக்கிய சம்பவம் என்றும் — எல்மோ பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

# தமிழகம் முழுவதும் நேற்று தி.மு.க. வினர் ஆர்ப்பாட்டம்!

## ஸ்ரீலங்கா கடற்படையின் தாக்குதல்களைக் கண்டித்து

இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்தி வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து தி.மு.கவினர் நேற்று தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

சென்னையில் வானொலி நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திரு கருணாநிதி தலைமை வகித்தார்.

அங்கு பேசிய திரு. மு. கருணாநிதி "இப் பிரச்சினையில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு இந்திய மீனவர்கள் சுட்டுக் கொலைப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வற்புறுத்தினார்.

கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்களுக்குள்ள மீன்பிடிக்கும் உரிமையை மீண்டும் ஏற்படுத்த மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (ஒ-க)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் ஏப்ரல் மாதத்திற்கான சம்பளம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை வர்த்தக வங்கியிலும், 16ஆம் திகதி திங்கள் முதல் தொழிற்சாலைக் காரியாலயத்திலும் வைத்து வழங்கப்படும் என்று கணக்காளர் திரு. அ. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (த)

## வீதியோட்டம்

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிகளின் முன்னோடி நிகழ்ச்சியான ஐந்து கிலோ மீற்றர் வீதியோட்டம் நாளை காலை 6.00 மணிக்கு வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகி நடைபெறும். (உ)

## ஆலயங்களில்

சுழிபுரம் — பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா 24 ஆம் திகதி பகல் 11-30 மணிக்கு நடைபெறும். மறுநாள் தீர்த்தத் திருவிழா இடம் பெறும். திருவிழா நாட்களில் தினமும் பிற்பகல் 4 மணி முதல் பிரம்மஸ்ரீ நை. நித்தியானந்த சர்மா மகாபாரதத் தொடர் விரிவுரை நிகழ்த்துவார்.

★ ★ ★

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் கோண்டாவில் இல்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயில், சாவகச்சேரி நுணாவில் மேற்கு விலைவேம் மருதடி வீரகத்தி விநாயகர் கோயில், மட்டுவில் தெற்கு வேற்கேணி ஸ்ரீ கந்தசுவாமி கோயில் ஆகியவற்றின் வருடாந்த மஹோற்சவம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த் திருவிழா 23 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 24 ஆம் திகதியும் நடைபெறும். (க-31)

★ ★ ★

யாழ். வண். வடமேற்கு கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோயில் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

திருவிழாத் தினங்களில் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு த. சிவகுமார் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார். மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து இளைஞர் மன்றத்தால் சமய அறிவுப் போட்டியும் நடத்தப்படவுள்ளது. (க 85)

★ ★ ★

துன்னாலை வடக்கு மிந்திரன் கண்ணகை அம்மன் கோவிலில் இன்று காலை மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

கும்பாபிஷேக விழாவையொட்டி பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா, அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் தெய்வீகப் பேருரைகள் நிகழ்த்துவர். (அ-173)

★ ★ ★

வழக்கம்பரை அம்மன் கோவிலில் இன்றைய வெள்ளிக்கிழமைத் திருவிழாவின் போது மாலை 5 மணிக்கு அபிராமி அந்தாதி ஆய்வுரைப் பிரசுரம் வெளியிடப்படும்

# திருக்கேதீஸ்வர உற்சவம்; சிறப்பு நிகழ்ச்சி நடத்துக!

## அடியார்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 13

சரித்திரப் பிரசித்தி பெற்ற பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரத்தின் கொடியேற்றதினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையாகும். இம் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவ தினமாகும்.

ஆனால் திருக்கேதீஸ்வரத்தில் மகோற்சவம் நடைபெற முடியாதவாறு அரச படைகள் ஆலயச் சூழலில் நிலை கொண்டுள்ளன. அடியார்கள் அங்கு சென்று வணங்க முடியாத நிலை.

ஆலயத்துக்குச் சென்று வணங்க முடியாதிருப்பினும் திருக்கேதீஸ்வர நாதனை நினைந்து வழிபடக்கூடிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு சைவபரிபாலன சபை ஆலயங்கள், சைவ மன்றங்கள், பாடசாலைகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உற்சவ கால நாட்களில் பின் வருமாறு கேதீஸ்வரப் பெருமானை நினைந்து வழிபடலாம் என்றும் சபை தெரிவித்துள்ளது.

★ ஆலயங்கள், சைவமன்றங்கள், பாடசாலைகளில் திருக்கேதீஸ்வரம் பற்றிய சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவது.

★ அச்சிறப்பு நிகழ்ச்சிகளில் திருக்கேதீஸ்வர பதிகங்களை ஓதுதல்

★ திருக்கேதீஸ்வர மகோற்சவத் திருவிழாக்களை உபயமாகச் செய்த பாடசாலைகள் குறிப்பிட்ட தினங்களில் தமது பாடசாலைகளில் திருக்கேதீஸ்வரம் சம்பந்தமான விசேட நிகழ்ச்சிகளையும் பூசைகளையும் நடத்துவது. (ஆ)

# "மண்ணுக்காக" திரைப்படம் திங்களன்று வெளியீடு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய "மண்ணுக்காக" தமிழீழத்தின் முதல் முழு நீள திரைச்சித்திரம் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ் குடாநாட்டின் திரையரங்குகளில் காண்பிக்கப்படவிருக்கின்றது.

இத்திரைப் படத்தில் சந்தனக்காடு நாடகக் கலைஞர்கள் தேவர் அண்ணா, கணேஸ், பூரணம், பிரியா, அமரசிங்கம், மகேந்திரன், பாஸ்கரன், சீலன், பேனாட், சுருளி, வேந்தன், உதயன், இளங்கோ, டயஸ் ஆகியோருடன் கலையரசன், சுகுமார், பெஞ்சமின், பாஸ்கரன் மழலைத் தாரகைகள் சி. சிவநிரஞ்சனி, சி. சிவநிரஞ்சனா, ஆன, விஜேந்தினி மற்றும் பலர் தோன்றி நடித்துள்ளார்கள்.

படத்தில் இடம் பெறும் இரண்டு பாடல்களையும் விஜயன், மேளின் வேஜினி ஆகியோர் இணைந்து பாடியுள்ளார்கள். வளர்ந்து வரும் இளம் இசையமைப்பாளர் முரளி இப்படத்திற்கான இசையை அமைத்துள்ளார்.

வல்வை யூரானின் மூலக் கதைக்கு, படவடிவம் கொடுத்து உரையாடல்கள், பாடல்கள் என்பவற்றை எழுதியுள்ளதோடு, ஒறியாவையும் மேற்கொண்டுள்ளார் பொன். கணேசமூர்த்தி

இப்படத்திற்கான தயாரிப்பு நிர்வாகத்தினை கலை, பண்பாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த பாஸ்கரன் மற்றும் நாகேந்திரசீலன், வல்வையூரான் ஆகியோர் கூட்டாக மேற்கொண்டுள்ளனர். (த)

## ரயில்வே கடவை ஊழியர்

# செயலகத்தில் வரவை பதிவு செய்ய வசதி

யாழ்ப்பாணம், மே 13

ரயில்வே கடவை ஊழியர்கள் தமது வருகைக்கான கையொப்பத்தை இனிமேல் யாழ் செயலகத்தில் வைக்க முடியும்.

யாழ். அரசாங்க அதிபர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் ரயில்வேத் திணைக்களத்தில் கடவை ஊழியர்களாக பணிபுரிந்த 360 பேருக்கு வழங்கப்பட்டு வந்த 1000 ரூபா சம்பளம் கடந்த டிசம்பர் மாதத்துடன் ரயில்வேத் திணைக்களத்தினால் நிறுத்தப்பட்டது.

இதனால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் யாழ். அரச அதிபருக்கு முறையிட்டு மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்திருந்தனர்.

அரச அதிபர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு அரச அதிபர் மூலம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான வருகைக்கான ஒப்பங்களை செயலகத்தில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்துச் செல்ல அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-100)

ஈழ அகதிகளை... (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் இருந்து திரும்பிய அகதிகளையும், அவர்களின் நிலைமைகளையும்நேரில் ஆராய்ந்த பின்னர் தலைமை அலுவலகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

தமிழகத்தில் இருந்து திரும்பிய அகதிகளுக்கு சரியான முறையில் உதவிகள் வழங்கப்படவில்லை என்றும் —

உயிராபத்துடன் அவர்கள் வாழ்வதாகவும் — அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தஅறிக்கையின்படி, ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை மீளபரிசீலனை செய்யுமாறு அந்த அமைப்பு மேற்கு நாடுகளைக் கேட்டுள்ளது.

ஏற்கனவே இந்திய அரசையும், தமிழக அரசையும் ஈழ அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் என மேற்படி அமைப்பு கோரியிருந்தது தெரிந்ததே. (ஒ-3)

ஸ்ரீலங்கா அரசின்... (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு திரும்பும்படி நெருக்கடி கொடுக்கப்படலாம் என்ற கவலையை அவர் வெளியிட்டார்.

இலங்கைக்கு திரும்பும்படி அகதிகளுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டு வருகிறதா இல்லையா என்பது பற்றியும்

அப்படிப்பட்ட நெருக்கடி கொடுக்கப்படுகிறதா என்பதை யு. என். சி. ஆர் கண்காணிக்க முடிகிறதா என்பது பற்றியும் சில காலமாகவே சந்தேகம் வெளியிடப்பட்டு வருவதாகவும்—

நெருக்கடி என்பது மறைமுகமாக கொடுக்கப்படலாம் என்பதுதான் எமக்குக் கவலை தரும் விஷயமாக உள்ளது என்றும் பிரிட்டிஷ் அகதிகள் நலன்காக்கும் கவுன்சிலின் இயக்குநர் சொன்னார்.

இப்படிப்பட்ட மறைமுக நெருக்கடி முன்னர் கொடுக்கப்பட்டு வந்தது என்றும் அவர் சொன்னார்.

இவ்விஷயமாக இந்தியத் தூதரைச் சந்திக்கத் தாம் அனுமதி கேட்டதாகவும்— ஆனால் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

ஒரு லட்சத்து 80 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் வெளிநாடுகளில் வாழ்வதாக பிரிட்டிஷ் அகதிகள் கவுன்சில் மதிக்கின்றது. இதில் சுமார் 70 ஆயிரம் பேர் தமிழகத்தில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படும் 5,500 இலங்கைத் தமிழ் அகதிகளை எதிர்வரும் ஆகஸ்டில் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப இந்தியாவும் இலங்கையும் கண்டுள்ள இணக்கத்தை மனித உரிமைகள் அமைப்பான அபயஸ்தாபனம் கண்டித்துள்ளது.

அகதிகள் இலங்கைக்குத் திரும்பியவுடனே பயங்கரவாத நடவடிக்கை தொடர்பான சந்தேகத்துக்குள்ளாவார்கள் என்று அனைத்துலக அபயஸ்தாபனத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பு அதிகாரி பீற்றர் நிக்கொலஸ் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அல்லது அவர்களது ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கொழும்பில் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றனர் என்றும் —

இலங்கைக்குத் திரும்பி அனுப்பப்படும் அகதிகளில் பெரும்பாலோர் கொழும்புப் பகுதிக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் —

எனவே இவர்களில் பலர் கைது செய்யப்படுவார்கள் அல்லது இலங்கை அதிகாரிகளால் இம்சைப்படுத்தப்படுவார்கள் என்று நாம் கருதுகிறோம்'' என்றும் பீற்றர் நிக்கொலஸ் தெரிவித்தார்.

இலங்கையில் வன்முறைக் கலாசாரத்துக்கு முடிவு ஏற்படும் வரை—

பாதுகாப்புப்படையினரிடம் அதிகாரம் இருக்கும் வரை—

எந்தத் தமிழ் அகதியும் இலங்கைக்குத் திரும்புவது பாதுகாப்பாக இருக்காது என்றும் திரு. பீற்றர் நிக்கொலஸ் தெரிவித்தார்.

விபத்தில்... (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

[பள்ளத்தில்] இறக்கி ஏறிய சமயம் இருபெண்களும் வீசப்பட்டனர்.

மரணமானவர் தலையில் படுகாயமடைந்து நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானார்.

இச்சம்பவத்தில் யோசப் அமுதா (வயது35) என்பவர் காயமடைந்தார். (ஒ-15)

பிரிட்டிஷ்... (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது மாரடைப்பு ஏற்பட்டது மருத்துவமனையில் அவருக்கு மரணம் சம்பவித்தது.

அண்மையில் பிரிட்டனில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் தொழிற்கட்சி அமோக வெற்றி பெற்றதை அடுத்து, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சி நாட்டின் ஆட்சியைப் பிடிக்கும் என்ற நிலை உருவாகிய சமயத்தில் திரு. ஸ்மித் மரணமானார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது. (இ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-05-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org